பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**14 08 2026** **FRIDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க அனைவரும் தம்மை அர்ப்பணித்துக்கொள்ள வேண்டும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கேட்டுக்கொண்டுள்ளார்.

**2.** பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையின்கீழ் வலிமையான இந்தியா உருவாக்கப்பட்டு வருவதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

**3.** உத்தராகண்டில் கட்டுமானப்பணி நடைபெற்று வந்த சுரங்கத்தில் நேரிட்ட விபத்தில் 7 பேர் உயிரிழந்தனர்.

**4.** நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட கொலம்பியாவிற்கு முதல்கட்டமாக 20 மெட்ரிக்டன் நிவாரணப் பொருட்களை இந்தியா அனுப்பி வைத்துள்ளது.

**5.** மலேசிய சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Rithvik Sanjeevi Satish Kumar** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

- - இனி விரிவான செய்திகள் - -

<<<<<<>>>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க அனைவரும் தம்மை அர்ப்பணித்துக்கொள்ள வேண்டும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கேட்டுக்கொண்டுள்ளார்.

சுதந்திர தினம் நாளை கொண்டாடப்படுவதையொட்டி, நாட்டு மக்களிடையே தொலைக்காட்சி மற்றும் வானொலி வாயிலாக இன்று அவர் உரையாற்றினார்.

நாடு சுதந்திரம் அடைந்த பின்னர், உலகின் முதன்மையான நாடாக இந்தியாவை உருவாக்க மாணவர்கள், ஆசிரியர்கள், விஞ்ஞானிகள், பொறியாளர்கள், மருத்துவர்கள், சுகாதாரப் பணியாளர்கள், விவசாயிகள் என அனைத்துதரப்பினரும் பங்களித்து வருவதாக அவர் கூறினார்.

பாதுகாப்புப்படையினர் மற்றும் காவல்துறை பணியாளர்கள் அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருவது பாராட்டுதலுக்குரியது என்றும் அவர் தெரிவித்தார்.

உலக அரங்கில் இந்தியாவின் நன்மதிப்பை உயர்த்தும் வகையில் இந்திய தூதர்கள் மற்றும் அதிகாரிகளும் சிறப்பாக பணியாற்றி வருவதாக அவர் கூறினார்.

மக்களின் தீவிர பங்கேற்புடன் தேசிய அளவிலான இயக்கங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக 25 கோடிக்கும் மேற்பட்டோர் வறுமையின் பிடியிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

பிரதமரின் வங்கிக்கணக்கு திட்டத்தின்கீழ், 50 கோடிக்கும் மேற்பட்டோர் பயனடைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதில் 32 கோடிக்கும் மேற்பட்டோர் பெண்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாடு முழுவதும் 80 கோடிக்கும் மேற்பட்டோருக்கு பொது விநியோகத்திட்டத்தின்கீழ் இலவச உணவு தானியங்கள் வழங்கப்படுவதன் மூலம் உணவு பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின்கீழ், 60 கோடி மக்களுக்கு ஆண்டுக்கு ஐந்து லட்சம் ரூபாய் வரை இலவச மருத்துவ காப்பீடு வழங்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

விவசாயிகள் நலனுக்காக செயல்படுத்தப்பட்டுவரும் திட்டங்களையும் அவர் பட்டியலிட்டார்.

டிஜிட்டல் பணப்பரிவர்த்தனையில் இந்தியா முன்னணியில் உள்ளதாகவும் அவர் கூறினார்.

தகவல் தொழில்நுட்ப பயன்பாட்டின்மூலம் வெளிப்படையான நிர்வாகம் உறுதி செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இயற்கை வளங்களை பாதுகாக்க அனைவரும் பாடுபட வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

அன்னையின் பெயரில் ஒரு மரம், சுற்றுச்சூழலுக்கு உகந்த வாழ்க்கை முறை போன்ற இயக்கங்களில் பொதுமக்கள் முழுமையாக பங்கேற்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

பெண்கள் அனைத்துத்துறைகளிலும் சாதனை படைத்து வருவதாக அவர் தெரிவித்தார்.

தேர்வு முறைகளில் சீர்திருத்தங்களை மேற்கொள்ள மத்திய அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அவர் கூறினார்.

கேலோ இந்தியா இயக்கம் காரணமாக இந்தியா சர்வதேச விளையாட்டுப்போட்டிகளில் பதக்கங்களை குவித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

மூத்த குடிமக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதற்காக மத்திய அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளையும் அவர் எடுத்துரைத்தார்.

நமது பாதுகாப்புப்படையின் வலிமை ஆபரேஷன் சிந்தூர் மூலம் உலகிற்கு எடுத்துரைக்கப்பட்டதாகவும் குடியரசுத் தலைவர் கூறினார்.

குடியரசுத் தலைவர் ஆற்றிய இந்த உரையின் தமிழாக்கம் சென்னை அகில இந்திய வானொலியில் இன்றிரவு ஒன்பதரை மணிக்கு ஒலிபரப்பாகிறது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

<<<<<<>>>>>>>

காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா சார்பில் பங்கேற்று பதக்கம் வென்றவர்கள் இளையோருக்கு உந்து சக்தியாக இருப்பார்கள் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில், இப்போட்டிகளில் பதக்கம் வென்ற ராணுவத்தை சேர்ந்தவர்களுடன் கலந்துரையாடுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

இவர்களின் சாதனையை கண்டு நாடு பெருமிதம் கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இப்போட்டிகளில் இந்தியா 39 பதக்கங்களை வென்றதாகவும், இதில் 18 பதக்கங்கள் பாதுகாப்புப்படை வீரர்கள் பெற்றுத் தந்துள்ளதாகவும் திரு ராஜ்நாத் சிங் கூறினார்.

<<<<<<>>>>>>>

வெளியுறவுக்கொள்கை தொடர்பாக பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு எதிராக மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் திரு ராகுல்காந்தி சர்ச்சைக்குரிய வகையில் கருத்து தெரிவித்துள்ளது துரதிருஷ்டவமானது என்று மத்திய அமைச்சர் திரு ஜெ பி நட்டா கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், எதிர்க்கட்சித் தலைவர் பொறுப்பில் உள்ள ஒருவர் இதுபோன்ற கருத்துகளை தெரிவிப்பது ஏற்புடையது அல்ல என்று குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>>

இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றும் இயக்கத்தில் பொதுமக்கள் ஆர்வத்துடன் பங்கேற்று வருகின்றனர்.

இதுவரை 4 கோடிக்கும் மேற்பட்டோர் தேசியக்கொடி ஏற்றி எடுத்துக்கொண்ட செல்ஃபி புகைப்படங்களை அதற்கான இணையதளத்தில் பதிவேற்றம் செய்துள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<<>>>>>>>

குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன், பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக நாளை மறுநாள் தமிழகம் வருகிறார்.

சென்னை, செங்கல்பட்டு, திருவாரூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் அவர் பங்கேற்க உள்ளார்.

நாளை மறுநாள் செங்கல்பட்டில் உள்ள தனியார் கல்லூரியின் பட்டமளிப்பு விழாவில் பங்கேற்கும் குடியரசு துணைத்தலைவர், அன்றைய தினம் மாலை சென்னையில் நடைபெறும் மறைந்த முன்னாள் ஆளுநர் இல கணேசனின் நினைவுதின நிகழ்ச்சியிலும் கலந்துகொள்கிறார்.

இதனைத்தொடர்ந்து வரும் திங்கட்கிழமை திருவாரூர் செல்லும் அவர், அங்குள்ள மத்திய பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்கிறார்.

இதன்பின்னர் தஞ்சாவூர் செல்லும் திரு சி பி ராதாகிருஷ்ணன், அங்குள்ள தனியார் நிகர்நிலை பல்கலைக்கழகத்தின் 40-ஆம் ஆண்டு விழா நிகழ்ச்சியிலும் பங்கேற்கிறார்.

<<<<<<>>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையின்கீழ் வலிமையான இந்தியா உருவாக்கப்பட்டு வருவதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

இன்று சண்டிகரில் சென்ட்ரல் வங்கியின் டிஜிட்டல் கரன்சி அடிப்படையிலான பணப்பரிமாற்றத் திட்டத்தை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

பிரதமரின் ஏழை மக்களுக்கான உணவு தானியத் திட்டத்தின் பயனாளிகளுக்கு இந்த திட்டத்தின்கீழ் நிதியுதவி அவர்களின் வங்கிக்கணக்கில் நேரடியாக செலுத்தப்படுவதாக அவர் கூறினார்.

பயனாளிகள் அத்தியாவசிய உணவுப்பொருட்கள் வாங்குவதற்கு மட்டுமே இந்த நிதியை பயன்படுத்துவதற்கான பாதுகாப்பு அம்சங்களை இந்த நேரடி பணப்பரிமாற்ற வசதி கொண்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>>

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட கொலம்பியாவிற்கு முதல்கட்டமாக 20 மெட்ரிக்டன் நிவாரணப் பொருட்களை இந்தியா அனுப்பியுள்ளதாக வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், மருந்துகள், மருத்துவ உபகரணங்கள், தற்காலிக கூடாரங்கள் அமைப்பதற்கான பொருட்கள் உள்ளிட்டவை இதில் அடங்கும் என்று கூறியுள்ளார்.

கொலம்பியாவிற்கு தேவையான அனைத்து உதவிகளையும் இந்தியா வழங்கும் என்றும் திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>>

உத்தராகண்டில் கட்டுமானப்பணி நடைபெற்றுவந்த சுரங்கத்தில் நேரிட்ட விபத்தில் 7 பேர் உயிரிழந்தனர்.

**Chamoli** மாவட்டத்துக்கு உட்பட்ட **Mayapur** பகுதியில் நிலச்சரிவு காரணமாக இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

இதில் **19** பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டதாகவும், **3** பேரை தேடும் பணி நடைபெற்று வருவதாகவும் காவல்துறையினர் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>>

அஸ்ஸாமில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மரப்பாலங்கள், சிமெண்ட் பாலங்களாக மேம்படுத்தப்பட உள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு ஹிமந்த பிஸ்வ சர்மா கூறியுள்ளார்.

குவஹாத்தியில் புதிதாக கட்டப்பட்ட பாலத்தை திறந்துவைத்து அவர் பேசினார்.

சரக்கு மற்றும் இதர போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மழைக்காலங்களில் போக்குவரத்து துண்டிக்கப்படாமல் இருக்கும் நோக்கில் புதிய பாலங்கள் கட்டப்படுவதாகவும் திரு ஹிமந்த பிஸ்வ சர்மா கூறினார்.

<<<<<<>>>>>>>

ஆந்திராவில் தீயணைப்புத்துறைக்கு **252** கோடி ரூபாய் செலவில் அதிநவீன வாகனங்கள் வாங்கப்படுவதாக அம்மாநில முதலமைச்சர் திரு சந்திரபாபு நாயுடு கூறியுள்ளார்.

குண்டூர் மாவட்டத்தின் **Undavalli** கிராமத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் **58** அதிநவீன தீயணைப்புத்துறை வாகனங்களின் சேவையை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

முதல்கட்டமாக **33** கோடி ரூபாய் செலவில், **65** வாகனங்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மாநிலம் முழுவதும் **17** புதிய தீயணைப்புத்துறை அலுவலகங்கள் கட்டப்பட்டுள்ளதாகவும், **36** தீயணைப்பு நிலையங்கள் நவீனமயமாக்கப்பட்டு உள்ளதாகவும் திரு சந்திரபாபு நாயுடு கூறினார்.

<<<<<<>>>>>>>

மலேசியா சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Rithvik Sanjeevi Satish Kumar** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், **13-21, 22-20, 21-18** என்ற செட் கணக்கில், மலேசியாவின் **Ming Hong Lim-**ஐ வென்றார்.

------------

உஸ்பெகிஸ்தானுக்கு எதிரான **17** வயதுக்கு உட்பட்டோருக்கான இரண்டு நட்புணர்வு மகளிர் கால்பந்து போட்டிகளில் இந்தியா பங்கேற்க உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டி வரும் **27** மற்றும் **30-**ஆம் தேதிகளில் **Tashkent-**ல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

------------------

சென்னை ஓபன் டென்னிஸ் போட்டி நவம்பர் மாதம் **2-**ஆம் தேதி தொடங்கி, **8-**ஆம் தேதிவரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<<<END>>>>>>>**